# சந்தனப் பேழை

கவிஞர் முருகுசுந்தரம்

# சந்தனப் பேழை

கவிஞர்
முருகுசுந்தரம்

அர்ஷாப் பதிப்பகம்
அம்மாப்பேட்டை சேலம்-3

முதற் பதிப்பு ஆகஃச்டு 75

© சிவகாமி

விலை உ.ருபா 2—50

பதிப்பு
அரிமாப் பதிப்பகம் சேலம்-3

பொன்முடி அச்சகம் அம்மாப்பேட்டை
சேலம்-3



# கவிஞரைப்பற்றிக் கலைஞர்

காற்றின் பெருக்கல் புயலாகும்
நாற்றின் பெருக்கல் பயிராகும்—இனிய
சாற்றின் பெருக்கல் சுவையாகும்
ஆற்றின் பெருக்கல் புனலாகும்—முருகு
பாட்டின் பெருக்கல் என்னாகும்?

பொன்னாகும்!
பூவாகும்!
புதிய மணமாகும்!

'சேர்வராயன் மலைக்கனியும்
சேலத்து மாங்கனியும்
செழுந்தமிழர் பெற்றுமகிழ்ந்தாலும்—என்
செம்மாதுளைக் கவிக்கிணையோ?'
எனக்கேட்கும் என்நண்பர்
முருகு சுந்தரனார்
பருகிடவே தமிழ்தருவார்.

உருகும் திருவாசகத்திற்கு
நெஞ்சென்பர்;
இவர் வாசகமும் அவ்வாறே!

சென்னை
14—1—75

# கட்டியம்

ஏறுதி திருக்கிள்ளி காலத்திலிருந்து முல்லை மலருக்கு இலக்கியத்தில் பேசும் வரலாறுண்டு; பாவேந்தர் காலத்திலிருந்து திராவிட இயக்கப் பாவலர் களுக்குப் புகழ்புரிந்த வரலாறுண்டு.

தமிழ் என்று சொன்னாலோ, பாட்டென்று பேசினாலோ 'ஓ...! இவன் கழகத்தைச் சேர்ந்தவன் போலிருக் கிறது!' என்று இங்நாட்டு மக்கள் நிமிர்ந்து பார்க்கு மளவுக்குத் தமிழோடும் பாடலோடும் நாம் தொடர்பு கொண்டிருக்கிறோம்.

சிலம்பு இல்லையென்றால் தமிழிசைக்கு வரலா-றில்லை; கழகம் இல்லையென்றால் பாட்டரங்கத்திற்கும் வரலாறில்லை. பாட்டரங்கைத் தமிழகத்தில் தொடங்கி வைத்த பெருமை பாவேந்தரைச்சாரும். பேச்சு மேடையைப் போல் பல்லாயிரக் கணக்கான மக்களைப் பாட்டரங்கில் கூட்டிச் சுவைக்க வைத்த பெருமை மாண்புமிகு கலைஞர் அவர்களைச் சாரும். பாட்டரங்க மேடையில் நிமிர்ந்து நிற்க முடியாத சிலர், தமது

தோல்வியை மறைப்பதற்காகச் 'சீ !சீ!' இந்தப் பழம் புளிக்கும்!' என்று ஊளையிட்டாலும், பாட்டரங்கத்தின் மரியாதை குறையவில்லை; மாறுகக் கூடிக் கொண்டு தான் இருக்கிறது.

பாட்டரங்க முத்துக்கள் சிலவும், கழக இதழ்களில் இழைத்த மணிகள் சிலவும், இத்தொகுப்புக் கென்றே பட்டை தீட்டப்பட்ட வைரங்கள் சிலவும் 'சந்தனப் பேழை'யில் இடம் பெறுகின்றன. பாவலர் முருகு தம் முத்திரை பதிக்காத பக்கம் இந்நூலில் இல்லை. பாவலருக்குப் பாராட்டு வழங்கியுள்ள மாண்புமிகு பண்டாரகர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்கு எம் நனிசிறந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதோடு, கழகக் கண்மணிகளுக்கு இத்தொகுப்பைக் காணிக்கை யாக்குகிறோம்.

*தி. பி. 2006* | *அன்புடன்*
*சேலம்-3* | அரிமாப் பதிப்பகத்தார்

# மாலை


| | |
|---|---|
| கவிஞரைப்பற்றிக் கலைஞர் | 5 |
| கட்டியம் | 6 |
| கனவு கலைக்காத தூக்கம் | 9 |
| தன்மானத் தத்துவத்தேர் | 10 |
| குனியாத குன்றம் | 12 |
| திராவிட அகத்தியர் | 14 |
| அறிஞர்களின் அணிவகுப்பு | 16 |
| அளவுகோல் மூளை அறிஞர் | 19 |
| தாளம் தவறாத தமிழிசைப் பாடல் | 21 |
| காஞ்சிக் கவிஞனின் தீஞ்சுவைக் காவியம் | 23 |
| தமிழே! நீயென் தாயே! | 26 |
| பால் நிலவு உதிர்ந்தது | 33 |
| பாட்டுக்கு வீரத்துறை | 36 |
| தேடுகிறேன் காணவில்லை | 38 |
| பேசாத நிலவு | 40 |
| அண்ணாவின் வீணை | 41 |
| கருக்கொண்ட எழுத்துக்கள் | 42 |
| ஆரூர்க் காதலர் | 47 |
| கரைந்ததுவா காற்றினிலே காஞ்சிக்கீதம் | 53 |
| சந்தனப் பேழை | 59 |
| தையாட்சி | 63 |

# கனவு கலைக்காத தூக்கம்

வீங்கும் கடலலையே! வேதனைத் தீக்காட்டில்
ஏங்கும் தமிழர் இதயச் சருகெரியத்
தூங்கும் தலைவன் தூங்கட்டும்; அவனருகில்
வீங்கும் கடலலையே! வீணிரைச்சல் செய்யாதே!

மேலேறும் செங்கதிரே! மிக்க களைப்போடு
சேலேறிப் பாயும் சென்னைக் கடற்கரைக்குக்
காலார வந்து கண்ணுறக்கம் கொள்ளுகின்றான்;
மேலேறும் செங்கதிரே! மேனியின்மேல் காயாதே!

கொட்டும் பனியே! கொஞ்சு தமிழ்த்தலைவன்
பட்டுடம்பு புண்ணாகிப் பளிங்குத் தளமமைத்த
தொட்டில் நடுவே தூங்குகிறான்; அவனுடம்பைக்
கொட்டும் பனியே! குளிரால் நடுக்காதே!

கார்முகிலே! எங்கள் காஞ்சி நகர்த்தலைவன்
பார்முழுதும் சுற்றிப் பட்டம் பலபெற்றே
ஊரின் கிழக்கில் ஒய்வெடுத்துக் கொள்ளுகிறான்;
கார்முகிலே! ஓங்கிக் கனைத்தவனை எழுப்பாதே!

# தன்மானத் தத்துவத் தேர்

சிலையாக நிற்கின்ற அண்ணா வுக்கும்
சினவேங்கை பெரியார்க்கும் உவமை சொன்னால்
அலையண்ணா! உலைபெரியார்! இந்நூற் றாண்டை
அடைத்தபுகழ் கொண்டவர்கள் இரண்டு பேரும்!
தலைநரைத்த பெரியாரோ இந்த நாட்டின்
தன்மானத் தத்துவத்தேர்; கிரேக்க வீரன்
அலெக்சாந்தர் போர்க்களத்தில் தோற்ற தில்லை;
அவனைப்போல் பெரியாரும் தோற்ற தில்லை.

கலைக்கொட்டைப் போல்தலைவர் இந்த நாட்டில்
கணக்கெடுத்தால் ஆயிரம்பேர்; சமுதா யத்தைத்
தலைகீழாய்ப் புரட்டிவைத்த ராம சாமி
தன்மானப் புல்டோசர்; இவர்க்கு முன்னால்
மலைபோன்ற மதமடமை சாதிக் குன்றம்
மண்ணாக நாம்கண்டோம்; பணத்துக் காக
விலைபோக விரும்பாத தலைவர்; தேர்தல்
விட்டில்கள் விரும்பிவந்த விளக்குக் கம்பம்.

இறங்கிவரும் பேராறு பிறருக் காக
எதிர்த்திசையில் செல்வதில்லை; இந்தச் சிங்கம்
மறந்துந்தன் கொள்கைகளைப் பிறருக் காக
மாற்றியது கிடையாது; வல்வில் ஓரி
குறிதவறி அடித்ததில்லை; பெரியார் பேச்சுக்
கூரம்பு தாக்காத தலைவர் இல்லை.
பொறிபறக்கும் இவர்பேச்சு நெருப்பில், சிக்கிப்
பொசுங்காத புராணங்கள் எவையும் இல்லை.

அரிக்கின்ற வைதீகப் படையைப் போக்கும்
அருமருந்து பெரியாரே; இவர் வயிற்றில்
செரிக்காத உணவுமில்லை; இவர் நுணுக்கச்
சிந்தனைகள் துளைக்காத துறையு மில்லை.
இருக்கின்ற காலத்தில் இந்த நாட்டில்
இவரைப்போல் புகழ்பெற்ற தலைவர் இல்லை.
இறப்பதற்கு முன்பாக இந்த நாட்டில்
இவரைப்போல் சாதித்தோர் எவரு மில்லை.

# குனியாத குன்றம்

எரியுந்தீ குனிவதில்லை;
இமயமலை குனிவதில்லை;
எவர்முன் னாலும்
மரியாதைக் காகவுந்தன்
தலைகுனிதல் பாவேந்தன்
வழக்க மில்லை.
விரிநிலவுக் கல்லாமல்
வேறெதற்கும் கடலெழுந்து
நின்ற தில்லை;
பெரியாருக் கல்லாமல்
பிறர்முன்னால் இவனெழுந்து
நின்ற தில்லை.

நுரையருவிப் பாட்டெழுதி
என்னபயன்? இவனைப்போல்
மடமை கண்டால்
இரைமீது பாய்ந்துவிழும்
இளஞ்சிறுத்தைப் பாட்டெழுத
எவனு மில்லை.
தரைவைரக் கற்களுக்கும்
தழும்புண்டு; கீற்றென்னும்
குற்ற முண்டு.
நரைதிரைகள் என்பதெல்லாம்
நமக்குண்டு; பாவேந்தன்
பாட்டுக் கில்லை.

ஒருமுறை தழுவியதும்
உள்ளத்தில் படர்வதுதான்
உயர்ந்த காதல்
இருமுறை படிக்குமுன்பே
இதயத்தில் ஏறுவதிக்
கவிஞன் பாடல்.
திருமுறை என்பதெல்லாம்
திருநீற்றுத் தமிழ்ப்பாடல்;
இந்நாட் டார்க்கு
நெறிமுறை என்பதெல்லாம்
நிச்சயமாய் இவனெழுதி
நிலைத்த பாடல்.

# திராவிட அகத்தியர்

அறிஞர் அண்ணாவா? யாரவர்? அவரோர்
இலக்கியக் குறும்பலா; இருமொழிக் கொண்டல்;
தீந்தமிழ் பரப்பும் திராவிட அகத்தியர்.
நற்றமிழ் என்னும் பளிங்குத் தூணில்
சிற்றுளி வேலை செய்யும் சிற்பி.
அடிவைத் தேறி அரங்கில் நின்று
பொடிவைத்துப் பேசும் புத்தகப் பிரியர்.
கலைஞரின் கைவிளக்கு; கள்ள மறியா
நாவலர் நாக்கு; நாட்டில் புரட்சிப்
பாவலர் களுக்குப் பணத்தின் தூக்கு.
பகுத்தறி வென்னும் பாசறை விட்டுக்
கள்ளரை நோக்கித் துள்ளி வரும்வேல்.
தொட்டால் சிந்தனை தெறிக்கும் ஈரோட்டுப்
பட்டறை தந்த கட்டிப் பிளாட்டினம்.
எட்டி வரும்பகைக் கீட்டி; நண்பரைக்
கட்டித் தழுவும் காஞ்சித் தென்றல்.
சட்ட சபைமாப் பிள்ளை; அறிஞர்
பட்டந் தாங்கிய பைந்தமிழ்க் களிறு.

நடக்கும் காவியம்; நாட்டில் மடமை
முடக்கு வாதத்தை முறிக்கும் மருந்து.
ஏழைகட் கேந்தல்; இல்லா தாரை
வாழ வைக்க வந்த காவிரி.
வாழிய அண்ணா பெரும்புகழ்
ஆழிசூழ் தமிழகம் அமைதி காணவே!

# அறிஞர்களின் அணிவகுப்பு

புத்தனோர் ஞானி; ரூசோ
புரட்சிக்கு வழிவ குத்தோன்;
கத்தியில் லாமல், ஷாவோ
கருத்தினுல் உலகை வென்ருேன்;
சத்துச்சொல் இங்கர் சாலோ
சரமழைப் பேச்சுக் காரன்;
அத்தனை பேரும் சேர்ந்த
அணிவகுப் பறிஞர் அண்ணு!

பாரியின் குளிர்சு னைபோல்
பண்பினன்; குறியில் தப்பா
ஓரியின் கூரம் பைப்போல்
ஒச்சிடும் பேச்சு வீரன்;
காரியின் குதிரைத் துள்ளல்
காட்டிடும் எழுத்துக் காரன்;
சீரிய குமணன் போலச்
சென்னியும் தமிழுக் கீவோன்.

போற்றுதற் குரிய பண்பைப்
போற்றிடத் தயங்க மாட்டான்;
ஆற்றுதற் குரிய தொண்டை
ஆற்ருமல் நிற்க மாட்டான்;
சோற்றினில் உப்பைப் போலச்
சுவைதரும் ஊட லுக்குத்
தோற்றிடத் தயங்க மாட்டான்,
தோல்வியே காணு வீரன்.

பஞ்சைகள் வடிக்கும் கண்ணீர்
பாய்ச்சிடும் ஈட்டி யென்றே
அஞ்சுவான்; சிறுத்தை போல
ஆயிரம் தம்பி பெற்ற
மிஞ்சிய செருக்கி ஞலே
மேல்வரும் படைகட் கஞ்சான்,
அஞ்சுதற் கஞ்சு கின்ற
அஞ்சாமை மிக்க வீரன்.

புறப்பட்ட சிகந்தர் என்னும்
புலிக்குட்டி முன்ஞல், அந்நாள்
சிறைப்பட்டார் மன்னர் பல்லோர்;
சிறகொடிந் தழிந்தார்; அண்ணுத்
துரைப்பட்ட தாரி முன்ஞல்
தோள்தட்டி வந்த பேச்சு
நுரைப்பட்டா ளத்தார் எல்லாம்
நொடியினில் தோற்றுப் போஞர்.

கண்விழித் தெழும்நா ளெல்லாம்
 காவிரிச் சோழர் போல
இந்நாட்டு வரலா றென்னும்
 இணையற்ற மாளி கைக்குப்
பொன்னோடு போர்த்து கின்றான்;
 புதுத்தூண்கள் எழுப்பு கின்றான்;
அண்ணுந்த புகழைக் கொண்ட
 அண்ணாத் துரைமா மல்லன்.

குயிலவன் பேரைக் கூவும்;
 குன்றத்துத் தென்றல் கூட
வெயில்மறைத் திருக்கும் மாலை
 வேளையில் புகழை வீசும்;
மயல்தரு தமிழ நங்கை
 மாக்கவி வாணர் நாவில்
பயிலுறும் கால மெல்லாம்
 பாடல்கள் பெற்று வாழ்வான்.

# அளவுகோல் மூளை அறிஞர்

வாழை இலைபோல் வகிடெடுத்த கலைஞர்
'கோழை' என்னும் சொல்லையே வெறுப்பவர்
பழகியதும் எவரையும் பார்த்துக் கணிக்கும்
அளவுகோல் மூளை அறிஞர்; நல்ல
திட்டத்தை உடனே செயற்படுத் துவதில்
பட்டாசு போலப் பற்றி வெடிப்பவர்.

காட்டு மயிலுக்கு நீட்டிய தோகையும்
ஆட்டுக்கு வாலும் அளந்து வைப்பவர்
கருதியது முடிப்பதில் வரிப்புலி; எதையும்
மறவா திருப்பதில் மத்தகக் களிறு.

சந்தக் கவிதைகள் சிந்தும் நாங்களோ
குந்தி யிருந்து கூவும் குயில்கள்.
இவரோ—
பறந்து கொண்டே பண்கள் உதிர்க்கும்
சிறந்த வானம் பாடிப் பறவை.

வண்ண மலரில் அமர்ந்ததும் வண்டுகள்
பண்ணை நிறுத்தி விடுவது வழக்கம்.
இவரோ,
பதவி மலரில் ஏறி அமர்ந்தும்
பாட்டை நிறுத்தாத திருக்குவளை வண்டு.

செழித்த சிந்தனை சிதறுமிக் கலைஞர்,
பழுத்த இலைகளை உதிர்த்து, மீண்டும்
தளிர்க்கத் தெரிந்த தமிழ்நாட்டு வசந்தம்.
பெய்யெனப் பெய்யும் பெருமழை; தமிழர்க்குச்
செய்யவேண் டுவதைச் செய்யத் துடிப்பவர்.
இவரது தலைமை இல்லையேல்
பருவமழை இழந்த பண்ணையித் தமிழகம்.

# தாளம் தவருத தமிழிசைப் பாடல்

சட்டை யிடாமல் சைவம் வளர்த்தவர்
கொட்டை கட்டிய நாவலர்—வெள்ளைச்
சட்டை யணிந்து சைவம் மறுப்பவர்
பட்டுக் கோட்டை நாவலர்.

நாற்று நடப்பது போல்நடப் பார்அண்ணு
நாவலர் நடந்துசென் ருலோ—பெரும்
சிற்றக் களிறென்று அம்பாரி யோடு
செல்வது போலி ருக்கும்.

எங்கள் கலைஞர் பேசிஞல் வானம்
இடிப்பது போலி ருக்கும்—நம்
நம்பிக்கை நாவலர் பேசிஞல் காவிரி
நடப்பது போலி ருக்கும்.

நாலும் இரண்டும் பாரதி தாசனின்
நறுக்குத் தெரித்த கவிதையுடன்—சுவைச்
சேலத்து மாம்பழம் கூடப் பிடிக்கும்
சென்னை நகர் பிடிக்கும்.

ஆணென் றிவரை உயர்திணை யாலே
அழைப்பது சட்டமென் றாலும்—கட்சித்
தூணென் றிவரை அஃறிணை யாலே
சொல்வதில் குற்ற மில்லை.

நாளும் தடவிப் பாடிய வீணைகள்
நாகங்கள் ஆவ துண்டு—இவர்
தாளம் தவறாத தமிழிசைப் பாடல்
தளைதட் டாத வெண்பா.

# காஞ்சிக் கவிஞனின் தீஞ்சுவைக் காவியம்

புரட்சியின் சிகரம் என்னைப் போலக்
குள்ளமாய் இராதென்று கூறினர் அண்ணா.
அண்ணா மலையில் பயின்றஅன் பழகனார்
இந்நாள் அதற்கோர் எடுத்துக் காட்டு
குட்டுவன் போல நெட்டை உருவமும்
நக்கீரன் போல நாக்குத் துணிவும்
செழியன் போலச் செருமுனை விருப்பமும்
பெருஞ்சித் திரன்போல் புலமைச் செருக்கும்
பொருந்தி யிருக்கும் இவரோ, யார்க்கும்
மருட்சியைக் கொடுக்கும் புரட்சியின் சிகரம்.

துடும்ப டித்துக் கூட்டம் சேர்த்துக்
கடும்பகை நடுவில் கட்சி வளர்த்த
பட்டுக் கோட்டை அழகிரி சாமியும்
முஜ்பீர் மீசைப் பன்னீர்ச் செல்வமும்
பிறப்பெ டுத்துப் பெரும்புகழ் நிறுவிய

முந்திரித் தோப்புத் தஞ்சைத் தரணி
தந்த மறவர்; செந்தமிழ்க் குரவர்.
தாரூர் மார்புத் தமிழவேள் பிறந்த
ஆரூர் நகருக் கடுத்தஊர்க் காரர்.

அந்நாள் அண்ணு மலைக்கழ கத்துப்
பண்டித மணிகளின் பட்டியில் வளர்ந்த
ஆட்டு மந்தையின் நடுவே கிளம்பிய
காட்டூர் வரிப்புலி! கடல்மடைப் பேச்சர்!
காஞ்சிக் கவிஞன் கையில் வளர்ந்த
தீஞ்சுவைக் காப்பியம்; பாண்டியன் ஆண்ட
பெரும்புகழ் மதுரையில் ஈரோட் டிராவணன்
கருஞ்சட்டை மாநாடு நடத்திய சமயம்
அங்குவாழ்ந் திருந்த ஆஞ்ச நேயர்கள்
லங்கா தகனம் நடத்தினர்; அந்நாள்
தொண்டர் படைக்குத் தலைமை ஏற்றுக்
கண்டவர் வியக்கக் கடமைகள் புரிந்தவர்.

தாடிப் பெரியார் தலைமையில், புதுவை
மீசைப் பாவேந்தர் பாராட் டுரைக்க
வெற்றிச் செல்வியின் வீணைக் கரங்களைப்
பற்றிக் காதற் பண்கள் இசைத்தவர்.
திலகர் போலவும் கோகலே போலவும்
ஜாமியா மில்லியா கல்லூரி கண்ட
ஜாகீர் உசேன் சாகிபு போலவும்
வங்க நாட்டுக் கபீர் போலவும்

அமெரிக்க நாட்டுக் கால்ப்ரெயத் போலவும்
அரசியற் களத்தில் வந்து குதித்து
முரசு முழக்கும் பேரா சிரியர்.

விண்ணும் மண்ணும் போலிரு பெண்களும்
கண்மணி போலோர் அன்புச் செல்வமும்
பெற்றவர்; குடும்பக் கட்டுப் பாடு
கற்றவர்; நலத்துறை நடத்தும் அமைச்சர்.
'கோடு உயர்ந்தது; குன்றந் தாழ்ந்தது'
என்று பேரறிஞரால் ஏற்றம் பெற்ற
திருச்செங் கோட்டின் தேர்தல் வீரர்,
தூய கையர்; தொண்டு மெய்யர்.
வாழ்க அன் பழகனூர் அண்ணு
நூல்களில் உள்ள எழுத்தைப் போலவே!

# தமிழே நீயென் தாயே!

கனுக்களில்லாச் செங்கரும்பே!
கவிதைத்தேன் காவிரியே!
கண்ணே! என்றன்
அணுக்களெல்லாம் கசிந்தூறி
ஆவியினை வளர்க்கின்ற
அமுதே! காதல்
மணக்கவரும் பூங்காற்றே!
மறத்தமிழர் கருத்தூற்றே!
மாந்தர் வாழ்வின்
நுணுக்கமெலாம் கருக்கொண்டு
நோகாமல் பெறுந்தாயே!
நீயென் தாயே!

## இறைவன் தந்த தமிழ்

கங்கையைச் சடையில் காக்கும் சிவனார்
தங்கையில் பிடித்த தமருகப் பெண்ணின்
இடுப்பைப் பிடித்து நொடித்த பொழுது
வடுப்படாத் தமிழும் வடமொழிப் பாடையும்
தடுக்கி விழுந்த தாகச் சொல்லுவர்
கடலைக் குடித்த பெருவிரல் அகத்தியன்
வடமலை விட்டுக் குடமலை நோக்கிப்
புறப்பட்ட போது புதுத்தமிழ் இறைவனால்
தரப்பட்ட தாகத் தமிழ்நூல் கூறும்
பண்டிதர் வழங்கும் பதினெட்டு மொழியையும்
அண்ட முதலான் ஆக்கினன் என்றும்
ஆரியம் செந்தமிழ் ஆகிய இரண்டையும்
காரிகை உமைக்குக் கற்றைச் சடையன்
அருகில் இருத்தி அருளினன் என்றும்
திருமூல நாயனார் பெருமையோ டுரைக்கிறார்
'ஆண்டவன் படைப்பன்றோ ஆரியம்!' என்று
நீண்டதோர் முழக்கம் 'செய்பவாள்' உணர்க
ஆரிய மொழியைப் பாணினிக் கன்று
தாரை வார்த்துத் தந்தவன் எவனோ,
அவனே—அந்தச் சிவனே—எங்கள்
சிதையாச் சீரிளஞ் செல்வியைத் தந்தவன்.

## தமிழே இறைவன்

'இசையோடு தமிழாய் இருப்பவன்' என்றும்
'தென்தமிழாய் வடமொழியாய் மறைகள் நான்காய்
திருவுருத் தாங்கிய பெருமான்' என்றும்
அண்டர் பிரானுக் காட்பட்ட அப்பர்
பண்டா ரத்தமிழ் பாடிக் களிக்கிறார்'
பரவையார் காதலால் படுக்கைகொள் ளாமல்
இரவைப் பகலாக்கி இருந்த சுந்தரர்
'பண்ணிடைத் தமிழை ஒப்பாய் போற்றி!
பண்ணார் இன்றமிழ்ப் பரஞ்சுடர் போற்றி'!
என்று பாடி இறைவனைத் தூதாய்க்
கன்று மானுக் கன்று போக்கினார்.
சோழன் வெண்குடை கவிக்கத் தில்லையில்
வேழம் ஊர்ந்த வேளாளச் சேக்கிழார்
'ஞாலம் அளந்த தெய்வத் தமிழ்' என்றார்.

## தமிழின் தெய்வத்தன்மை

மாண்புசேர் மன்றலில் மணந்த மனைவியை
ஆண்பால் என்றும் அலிப்பால் என்றும்
கோணல் இலக்கணம் கூறும் ஆரியம்
அற்புதம் நிகழ்த்தும் ஆண்டவன் மொழியாம்
சிற்பமும் கூத்தும் தேன்வரிப் பாட்டும்
பிறமொழிக் கில்லா அகம்புறப் பகுப்பும்
மரபோ டுவமையும் எழுத்தொடு சொல்லும்

பழுதில் லாத இலக்கணப் பாங்கும்
இழுமென் றிசைக்கும் விழுமிய ஓசையும்
என்புநெக் குருகி அன்பரா குதற்குக்
கண்கள்நீர் சோரக் கழறுவா சகமும்
தன்பால் பெற்றுத் தழைத்த செந்தமிழ்
ஆண்டவன் தொழுகைக்கு வேண்டா மொழியாம்!
நீரில் ஏறி நெருப்பில் நின்று
பாரோர் வியக்கத் தன்புகழ் நிறுத்தியும்
திருமறைக் காட்டுக் கதவம் திறந்தும்
திறந்த கதவை மூடியும், ஆண்பனை
பெண்பனை யாகப் பேரருள் புரிந்தும்
என்புபெண் ணுக்கியும் கண்குறை போக்கியும்
முதலை யுண்ட குதலையை மீட்டும்
வீசு பெருங்கனற் காளவாய் தன்னை
மூசு வண்டறை பொய்கையாய் மாற்றியும்
உப்புக் கடலில் பாய்ச்சிய பாறையைத்
தெப்ப மாக்கி மிதக்க வைத்தும்
மறைகள் முழங்கும் ஆரூர் வீதியில்
இறைவனைத் தன்பின் நடக்க வைத்தும்
வல்லமை காட்டிய வண்டமிழ் மொழியில்
இல்லாத தெய்வத் தன்மை, ஆரியச்
சொல்லில் என்ன சொட்டு கின்றதோ?
மூச்சுத் தளர்ந்து முடித்தலை நரைத்துப்
பேச்சு வழக்கும் பெருமையும் குன்றிச்
சிதையில் ஏறிய சீதை மொழிதான்
அற்புதம் நிகழ்த்துமோ? அந்தநாள் தொட்டுக்
கற்புக் கெடாமல் கலைகள் வளர்க்கும்
கண்ணகி மொழிக்கப் பெருமை யில்லையோ?

## மந்திரத் தமிழ்

ஆரியம் ஒன்றே மந்திரம் என்று
வீரியம் பேசும் வீணரே! கேட்பீர்!
'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம்' என்பதாய்
ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப் பியனார்
சொல்காப் பியந்தரும் சொற்பொருள் உணர்க!
நிறைமொழி மாந்தரின் பொருளுணர் வீரோ?
நிறைமொழி மாந்தரும், அவர்தம் ஆணையாம்
மறைமொழி, மந்திரம் எங்களுக் கில்லையோ?
கங்கைக் கரையில் அன்றிஅம் மாந்தர்
காவிரிக் கரையில் வாழ்ந்த தில்லையோ?
அரசியல் நிறுவிப் பொருளியல் ஆய்ந்து
முரசு முழக்கிய மூத்த தமிழர்கள்
அறியாத மந்திரப் பெருமையை—அந்நாள்
வாழ்விடம் இன்றி வழியெலாம் மேய்ந்து
கண்ட படிவாழ்ந்து களைத்துக் கடைசியில்
ஒண்டவந் தவரென்ன கண்டு கிழித்தீர்?
ஆரியம் ஒன்றே ஆண்டவன் விரும்பும்
அருச்சனை என்பதாய் உளறும் கோயிற்
பெருச்சா ளிகளுக் கொன்று கூறுவன்;—
'அருச்சனை பாட்டே யாகும்
ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார்
தூரமறை பாடும் வாயார்'
செந்தமிழ் அருச்சனை செய்யென ஆண்டவன்
சுந்தர மூர்த்திக்குச் சொன்னதிக் கட்டளை

நெருப்பு வேள்விகள் நடத்திய ஆரியர்
விருப்புடன் தாங்கள் வணங்கிய இறைக்கு
மாட்டையும் ஆட்டையும் மாவையும் அவியாய்
ஊட்டினர் என்பதை அவர்மறை கூறும்.
இனிக்கும் தமிழையே தென்னாட் டிறைவன்
தனக்குண வாகக் கொண்டனன்; எனவே
'தமிழ்ப்பாட் டவியுணும் பரமன்' என்று
பாடிப் பரவினர்; அவ்விறை வற்குப்
பால்வாய்ப் பசுந்தமிழ் பகையாவ தெங்ஙனம்?
மொய்குழல் வள்ளி முருகன், தமிழால்
வைதவர் தமையும் வாழவைப் பானெனில்
அத்தமிழ் அருச்சனைக் காகாப் பொருளோ?

## எட்டி நில் பகையே!

அடுக்கிய கோடி அரும்புகழ் பெறுந்தமிழ்;
வடுப்படாப் பசுந்தமிழ், வண்டமிழ், ஒண்டமிழ்
கோவிலின் உள்ளே கொலுக்கொள் ளாவிடில்
கோவிலைத் துறப்பினும் துறப்போம்! ஆனால்
குளிர்தமிழ் என்றும் துறப்போம் அல்லோம்!
'தமிழ்நிலை தாழத்' தமிழர்நாட் டுள்ள
உமியும் தவிடும் ஒருப்படா துணர்க!
மாதர்வாண் முகத்து மங்கை யிருக்க
ஏதில் பிணத்தைத் தழுவார் தமிழர்!
வங்க நாட்டிலோ, மராட்டிய நாட்டிலோ,
எங்கள் தமிழால் இறைவனை வணங்க
ஆணையிட் டோமா? ஆணை யிட்டது

முத்தமிழ் நாட்டில்! மூவேந்தர் எழுப்பிய
சித்திரம் சிலைகள் சிரிக்கும் கோவிலில்!
நாளும் அறங்கள் நாடிப் புரிந்த
வேளிர்கள் வேந்தர்கள் பெருநிலக் கிழார்கள்
பச்சை யப்பர்போல் பச்சைத் தமிழர்கள்
உச்ச வரம்புக் கஞ்சிய செல்வர்கள்
விட்ட நிவந்த வேலி நிலங்களின்
வருவாய் கொண்டிங்(கு) அறுகாலப் பூசை
நடக்கும் கோவிலில்! ஆனால் தமிழைக்
கோவிலில் எதிர்க்கும் குள்ளனே! நீயார்?
சேரனா? சோழனா? பாண்டியன் பேரனா?
கட்டிக் முடித்தபின் காசுக் காக
எட்டிப் பார்த்தே இறங்கிய பார்ப்பு!
வேலி நிலங்களின் விளைச்சலை உண்டு
தாழி வயிற்றை வளர்ப்பவன்; நீயா
தமிழுக்குத் தடைக்கல்? தடையாக நின்றால்
இமயக் குன்றமும் எங்களுக் கப்பளம்!
கடலும் சூழ்ச்சியும் காலமும் முயன்று
முடியாச் செயலை முயல்பவர்; இந்நாள்
எவரா யிருப்பினும் அவரை எதிர்த்து
நீட்டும் எட்டுக் கோடி கைகளும்
ஈட்டியாய் மாறும்! எட்டிநில் பகையே!

*1939 மார்ச் திங்கள் 12ஆம் நாள் மாலை தமிழ்மறவன் தாளமுத்து அடக்கம் செய்யப்பட்டபோது, தோழர் சி. பாசுதேவ் தலைமையில் இடுகாட்டில் நடை பெற்ற இரங்கற்கூட்டத்தில், இந்தி எதிர்ப்புப் போர்த் தளபதி பேரறிஞர் அண்ணா ஆற்றிய கண்ணீர்ப் பேச்சு.*

# பால் நிலவு உதிர்ந்தது!

இருதிங்கள் முன்பாக இந்திப் போரில்
இளங்குருத்து நடராசன் இறந்தான்; அந்தப்
பெருவீரன் செங்குருதி காய்வ தற்குள்
பின்னுமொரு களப்பலியா? தமிழர் கண்ணீர்த்
தெருவெள்ளக் கடல்மீது தாள முத்து
தெப்பவிழாக் காணுகின்றான்; சொந்தத் தம்பி
ஒருவனை நான் இழந்ததுபோல் உணரு கின்றேன்;
உண்மையில்நான் ஒருபாதி இறந்து விட்டேன்.

❋
'சாக்கோட்டை' மாநாட்டில் வீர நாடார்
சமூகத்தைப் பாசறைக்குள் அழைத்துச் சொன்னேன்:
'பூக்காடென் றெண்ணாதீர்! நீர் அனுப்பும்
போர்மறவர் மீள்வரென்ற உறுதி யில்லை!
தீக்காட்டில் நுழைகின்றோம்!' என்றேன்; அந்தத்
தீரவுரை கேட்டுவந்த தாள முத்து
சாக்காட்டைத் தழுவிவிட்டான்; எனது பேச்சைச்
சாகாத சரித்திரமாய் மாற்றி விட்டான்.

---

❋சாக்கோட்டைச் சுயமரியாதை மாநாடு

பழுத்தஇலை சருகாகி உதிரும்; வெள்ளைப்
பால்நிலவே உதிர்வதென்றால் சகிப்போ மாநாம்?
செழித்தகுலை வாழையைப்போல் மனைவி, அன்பாய்ச்
சேர்த்தணைத்த தளிர்க்கையை ஒதுக்கி விட்டு
மொழிப்போர்க்கு வந்தவனை இழந்து விட்டோம்;
முட்டையிலே சரபத்தைப் பறிகொ டுத்தோம்;
தழைத்தவொரு காப்பியத்தை, வளர்வ தற்குள்
தற்சிறப்புப் பாயிரத்தில் முடித்து விட்டோம்.

கார்மேக வட்டத்தைச் சட்ட மிட்ட
கருப்புக் கண்ணாடியினைத் துடைத்த வண்ணம்
மார்தட்டிச் சிரிக்கும்ஆச் சாரி காலில்
மானமற்ற தமிழினத்தார் சாய்ந்தால், பின்னர்
ஆர்தட்டிக் கேட்பதற்கு முடியும்? தூய
அருந்தமிழைத் தீர்ப்பதற்குக் கத்தி தீட்டும்
போர்பந்தர்ச் சம்பந்தி நினைத்தால், நானும்
புதைகுழியை நோக்கித்தான் போக வேண்டும்.

கண்ணையிடந் தப்பியதும், நந்தன் செந்தீக்
காட்டுக்குள் குளித்ததுவும், புராணம். யாழின்
பண்ணொழுகு செந்தமிழே! இவைகள் உன்றன்
பதமலருக் கினிப்புதிய வரலா றாகும்.
தண்ணீரைத் தெளிப்பதனால் அமைதி யுற்றுத்
தணிவதில்லை எரிமலைகள்; மதக்க ளிற்றைக்
கண்ணிவைத்துப் பிடிப்பதற்கு முயல்கின் றார்கள்;
கட்டாயம் தோல்வியினைச் சந்திப் பார்கள்.

ஆளவந்தார் ஆணைகளுக் கஞ்சி, இந்தி
அரக்கியினைக் கைப்பிடிக்கச் செல்வோர் எல்லாம்
தாளமுத்து நடராசன் பிணத்தை நாளை,
தாண்டித்தான் சென்றாக வேண்டும். இந்தக்
கோளரிகள் தியாகத்தின் மீதே, ஆட்சிக்
கோட்டையினை நாமெழுப்ப வேண்டும்; நாட்டில்
நாளையிந்த வீரர்க்குச் சிலையெ டுத்தால்
நடுவினிலே பெரியாரின் சிலைஇ ருக்கும்

# பாட்டுக்கு வீரத்துறை

பக்தித் துறையன்று
முக்தித் துறையன்று
பாட்டுக்கு வீரத்துறை—தமிழ்
நாட்டுக்குக் காவல்துறை—நல்ல
முத்தமிழ்க் குத்துறை
கண்டஅண் ணாத்துரை
தித்திக்கும் காஞ்சித்துரை—தமிழ்
முத்துக்கு ளிக்குந்துறை.

அரும்புடைக் குந்தேனைக்
கரும்புடைக் குஞ்சாற்றை
அழகுத் தமிழாகத் தீட்டுவார்—அதைக்
கழகத் தமிழர்க்குக் காட்டுவார்—நாளும்
விரும்பி வருமன்பர்
நெருங்கிவந் தால்தமிழ்க்
கரும்பொடிக்கும் கையை நீட்டுவர்—பின்னர்க்
கரும் பொடிக்கும் கையை நீட்டுவார்.

குருத்து விடுமறிவை
அறுத்து விடுமடமைக்
கருத்துஅடைக்கும் திட்டம் தீட்டுவார்—பின்னர்க்
கருத்தடைக்கும் திட்டம் தீட்டுவார்—என்றும்
பொறுத்திருக் குந்தம்பி
மறுத்துரைக் காவண்ணம்
சிறுத்தையெழத் தமிழைப் பேசுவார்—முத்துக்
கருத்துக்களை அள்ளி வீசுவார்.

மெச்சு புகழ்மிக்க
கச்சி நகர்தந்த
மேதை இருக்கும்வரை—அவர்
பாதை இருக்கும்வரை—கலை
உச்சியிலே வைத்து
மெச்சப் படுகின்ற
கச்சி குலைவதில்லை—நம்
கட்சி குலைவதில்லை.

# தேடுகிறேன் காணவில்லை

தேடித் தேடியுனைக் காண முடியவில்லை
தேடாமலும் அண்ணு இருக்க முடியவில்லை
பாடி அழுதாலும் பாட்டுச் சலிப்பதில்லை
பாடாமல் இருந்தாலோ அதுதான் பெரியதொல்லை
(தேடி)

மாமரம் தளிர்த்ததடி
மாம்பூ மலர்ந்ததடி
தேமாங் கனிக்குலைகள்
தின்னக் குலுங்குதடி
மாமரம் தளிர்ப்பதற்கு
மரமேறிக் குரல்கொடுத்த
தேமதுரத் தமிழ்க்குயிலைத்
தேடுகிறேன் காணவில்லை (தேடி)

கங்குல் இருள்மெதுவாய்க்
கட்டுக் குலைந்ததடி
எங்கும் செங்கதிர்கள்
இருளைக் கிழிக்குதடி
கங்குல் இருட்டுக்
கதவுடைத்து முன்வந்த
எங்கள் விடிவெள்ளி
எங்கோ மறைந்ததடி (தேடி)

சதிராடும் முல்லைச்
சரங்கள் குலுங்குதடி
புதிய கமலம்
புறவிதழை அவிழ்க்குதடி
மதுமலர்கள் எல்லாம்
மனம்வருந்தக் காஞ்சிநகர்ப்
புதுமணத் தென்றல்
போயெங்கோ மறைந்ததடி (தேடி)

# பேசாத நிலவு

வங்கக் கடலே அழாதே—காஞ்சித்
தங்கத் தமிழ்த்தேரைத் தட்டி எழுப்பாதே
**வங்கக்...**

சட்ட சபைஅலுப்போ? சந்தனச் சிந்தனைகள்
கொட்டிக் காஞ்சியிலே குவித்த பெருங்களைப்போ?
எட்டி நடந்துபடி ஏறிவந்த இளைப்போ?
என்ன காரணமோ? அண்ணன் உறங்குகிறான்.
**வங்கக்...**

பாராளு மன்றத்தைப் பற்றிய சிந்தனையோ?
பட்ட மளிப்புவிழா பற்றிய கற்பனையோ?
ஓரங்க நாடகத்தின் உள்ளத்து ஒத்திகையோ?
ஒன்றும் புரியவில்லை; ஓவென்று கூச்சலிட்டு.
**வங்கக்...**

பேசாத தென்றலைப்போல் ஓசையில் லாமலன்பை
வீசும் எமதண்ணன் வேதனை புரியவில்லை.
பாசக் குளிர்நிலவைப் பரப்பும் முழுமதிக்குப்
பேச்சென்ன வெனச்சொல்லிப் பேசா திருக்கின்றான்.
**வங்கக்...**

# அண்ணுவின் வீணை

ஆரூர்ச் சோலைக் குயில் கூவுது—எங்கள்
அண்ணுவின் வீணை கவிபாடுது. (ஆரூர்)

செந்தமிழ்ப் புலவர்க்குக் கைநீட்டுது—கற்புச்
செல்விக்குக் கடலோரம் சிலைநாட்டுது
வந்தவர் மகிழ்வூற முகங்காட்டுது—எங்கள்
வரலாற்றைப் பொன்னேட்டில் இதுதீட்டுது (ஆரூர்)

பிச்சைக் காரர்க்கு நிதிதேடுது—தான்
பிறந்த மண்ணுக்குப் புகழ்தேடுது
உச்ச வரம்பை உளம்நாடுது—எங்கள்
உள்ளத்தில் சமதர்ம விதைபோடுது (ஆரூர்)

மத்திய அரசாங்கம் செவிசாய்க்கவே—இது
மாநில சுயாட்சிப் பண்பாடுது
கத்தி முறையாலே சாதிப்பதை வெறும்
கடைக்கண் அன்பாலே சாதிக்குது (ஆரூர்)

மாளிகை அரசாங்க முறைமாற்றுது—பொது
மக்கள் அரசாங்க நிலைபோற்றுது
வாழ முடியாத வறியோர்க் கெல்லாம்—புது
வசந்தம் வரவேண்டி இதுகூவுது (ஆரூர்)

# கருக்கொண்ட எழுத்துக்கள்

கொழுத்தபலா செவ்வேரில் படுத்தி ருக்கும்
கொத்துமலர் கொண்டையிலே படுத்தி ருக்கும்
விழுப்புண்ணே மார்மீது படுத்தி ருக்கும்
வில்லாற்றல் தோள்மீது படுத்தி ருக்கும்
செழித்தபுகழ்ப் பாவேந்தர் நெஞ்சக் கூட்டில்
சிங்கங்கள் படுத்திருக்கும்; அண்ணு வீட்டில்
எழுத்துக்கள் கருக்கொண்டு படுத்தி ருக்கும்;
எடுத்தெழுத மாட்டாரா எனத் துடிக்கும்.

சிந்துநடை எழுத்தாளர், பக்தித் தேனைச்
சிந்துநடை எழுத்தாளர், கம்ப னைப்போல்
சந்தநடை எழுத்தாளர், திருடு கின்ற
சந்துநடை எழுத்தாளர், மயங்க வைக்கும்
மந்தநடை எழுத்தாளர், சொல்லு ருட்டி
மருட்டுநடை எழுத்தாளர் இருக்கும் நாட்டில்
'சொந்தநடை எழுத்தாளர் இவரே' என்று
சொல்லுகின்ருர் கற்றறிந்த மேதை யெல்லாம்!

தித்திக்கும் தேன்வரட்டும்; பால் வரட்டும்;
தெங்கிளநீர்க் காய்வரட்டும்; பெண்ணு தட்டு
முத்தத்தைப் பறித்தெடுத்துப் பாகில் தோய்த்து
முன்னாலே வைக்கட்டும்; வானில் எங்கோ
புத்தமுதம் இருக்கிறதாம்; அதனைக் கூடம்
புட்டியிலே நிரப்பிவந்து தரட்டும்; இன்னும்;
எத்தனைதான் இருந்தாலும் அவற்றை அண்ணு
எழுத்துக்கள் சுவையாலே வெற்றி கொள்ளும்.

உரைதந்தார் மேடையிலே; பகைவர்க் கஞ்சி
ஓடாத படைதந்தார்; நெஞ்சத் திற்குப்
பொறைதந்தார்; திரைதந்த கடலின் ஓரம்
புலவர்க்குச் சிலைதந்தார்; பசிப்பி ணிக்குச்
சிறைதந்தார்; சிந்திக்கக் கற்றுத் தந்தார்;
சிறுத்தையைப்போல் தம்பியர்க்குச் சிந்தை தந்தார்
உரைநடையில் கவிச்சுவையை வடித்துக் காட்டும்
உத்தியினை முதன்முதலில் இவரே தந்தார்.

வெடிக்கின்ற குண்டுச்சொல், விரல்கள் நீவும்
வீணைச்சொல், விழியாவர்த் தனங்கள் தந்து
முடித்துப்பின் முத்தாய்ப்பாய் வைக்கும் நல்ல
முத்தச்சொல், முத்துச்சொல், தென்னம் பாளை
வடிக்கின்ற சத்துச்சொல், அண்ணன் நூலில்
வருஞ்சொற்கள்; இவர்வேலைக் காரி கூட
அடுக்குத்தேன் போற்சொல்லை அடுக்கு கின்றாள்!
அப்பப்பா! இவரன்றோ எழுத்து வேந்தர்!

அச்சத்தால் அதட்டுபவர், பிறையைப் போல
அரிவாளைக் காட்டுபவர், நொடியில் உம்மை
நிச்சயமாய் அழித்திடுவோம் என்று சொல்லி
நெருப்புமழை பொழியும்பத் திரிகைக் காரர்
எச்சரிக்கை என்றுசொல்லி மேடை யேறி
எக்காள மிட்டவர்கள், கொக்க ரித்துக்
கச்சைகட்டிக் கதைகட்டி, அழிக்க வேகங்
கணங்கட்டிக் காத்திருந்த ஆட்சியாளர்,

கனிதடுக்கிப் பால்தடுக்கிச் சிவனே என்று
கன்னியின்மேல் விழுஞ்சந்நி தானத் தார்கள்
பணபலத்தைப் படைபலமாய் வைத்துக் கொண்டு
படைநடத்தும் பணக்காரர், இவர்க ளெல்லாம்
துணிவோடு தொகையாக எதிர்த்த நாளில்
தூங்காமல் நம்மண்ணு எழுது கோலால்
அணிவகுப்பே நடத்திவந்தார்; பகைக்கூட் டங்கள்
அத்தனையும் பொடியாக்கிப் போட்டு வந்தார்.

அறமிருக்கும்; அன்பிருக்கும்; அச்சப் பேயின்
அடிமரத்தை வெட்டுகின்ற கரமி ருக்கும்;
தரமிருக்கும்; படமெடுத்த பாம்புக் கோணல்
தனைக்காட்டும் கூன்முதுகை நிமிர்த்து கின்ற
திறமிருக்கும்; திருநாட்டுத் தமிழர் மானம்
திருப்புதற்குக் குட்டுவன்போல் குறைவில் லாத
மறமிருக்கும்; பரலோகஞ் செல்லு தற்கு
மார்க்கந்தான் இவரெழுத்தில் இருப்ப தில்லை.

அங்கங்கள் பொடியாகப் பாடு பட்ட
ஆனந்தன் நாடகத்தை எழுதி டாமல்
சங்கரனும் சங்கரியும் காத லித்த
சல்லாப நாடகங்கள் தந்தி ருந்தால்
கங்குபட்ட ராயிருப்பார்; இவருங் கூடக்
கனபாடி யாயிருப்பார்; ஏழை மக்கள்
அங்கந்தான் அமைச்சனென்ற நினைப்பி னாலே
ஆனந்த னென்றும் வாழ்ந்து வந்தார்.

"கோழிகளை வளர்ப்பதற்கும், மரத்தில் தாவும்
குரங்குகளை வளர்ப்பதற்கும் திட்டந் தந்தீர்;
மாந்தர்களை வளர்ப்பதற்குத் திட்ட முண்டா?
மரம்வைத்தவன் தண்ணீர் வார்ப்பான் என்றீர்!
ஆலைகளை வானொலியை இராமன் போன்ற
அவதார புருஷர்களா கண்ட றிந்தார்?
ஏனிந்தக் கடவுளர்கள்? மனித னாக
இருப்பதுமேல்" என்றண்ணா எழுதி வந்தார்.

"பழம்அழுகும்; மலர்கசங்கித் தீநாற் றத்தைப்
பரப்பிவிடும், பட்டைப்போல் பளப ளக்கும்
தழைசருகாய் மாறிவிடும்; பயனில் லாத
தத்துவங்கள் அவற்றைப்போல் அழிதல் திண்ணம்.
நுழைகின்ற நூலகத்தில் அட்லாஸ் வேண்டும்;
நுழைக்குருட ராக்கும்பஞ் சாங்கம் வேண்டாம்"—
எழுதியுள்ளார் நம்மண்ணா! தமிழகத்தில்
எவர்சொன்னார் இவரைப்போல் இனிப்புச் சொல்லால்?

சிட்டுப்போல் காதலர்க்கும், காஞ்சி தந்த
சிற்பிக்கும் பொருத்தமுண்டு; காத லர்கள்
கட்டுரைகள் தந்தபடி அணைத்துக் கொண்டு
கண்துஞ்சா திருப்பார்கள்; இவரும் கூடக்
கட்டுரைகள் நள்ளிரவில் தருவார்; பின்னர்க்
காவியத்தைச் சென்றணைப்பார்; இவர் எழுத்துப்
பட்டறையே இரவில்தான்; சாமக் கோழி
பதைத்தெழுந்தால் இவர்மூளை விழித்துக் கொள்ளும்

வரலாற்றை உருவாக்கும் எழுத்தா ளர்கள்
வையத்தில் ஒருசிலரே! அறிஞர் அண்ணா
வரலாற்றை எழுப்பியவர்; தமக்குப் பின்னால்
வளமான எழுத்துப்பட் டாளந் தந்த
திறமிக்க எழுத்தாளர்; இவர் எழுத்தில்
தீட்டித்தான் சிந்தனைக்குக் கூர்மை ஏற்றி
அருநூல்கள் தருகின்றோம்; கவிதை யாற்றை
அரங்கத்தில் விடுகின்றோம்; வாழ்க அண்ணா!

---

அண்ணா கவியரங்கம் - சேலம். 4-6-68

# ஆரூர்க் காதலர்

சோலை இளவரசி! சுந்தரப் பைங்கிளியே!
காலைக் கதிரொளியில் கண்பறிக்கும் மரகதமே!
தாமரை இலையுடம்புத் தத்தையே! கொய்யாவாம்
மாமியார் வீட்டில் மகிழ்ந்தாடும் மருமகளே!
அக்கா அக்காவென்று வக்கணைச் சொல்பேசிப்
பெண்ணின் தோளேறிப் பெரும்பழம் எனநினைத்துக்
கன்னத்தைக் கோதிக் காதலிக்கும் கண்மணியே!
கொஞ்சு மொழிபேசும் அஞ்சுகமே! ஆரூரில்
அஞ்சுகத் தாய்பெற்ற ஆணழகன் பெருமையினைக்
கொஞ்சம் எனக்குக் கூறுயோ? உன்வாயால்
குளறி மொழிந்தாலும் குற்றமில்லை! சேலத்தின்
அழகாபுரத்துக்கு அருகிலுள்ள மாந்தோப்பில்
தேனைப் பதம்செய்து, செம்பில் நிரப்பிவைத்து
ஆனைத் தலைபோல் அசைகின்ற மாம்பழங்கள்
உண்ணக் கொடுப்பேன் ஓடிவா அஞ்சுகமே!
எத்தனை நாட்கள் என்தலைவனைப்பிரிந்து
நத்தை இரவை நகர்த்துவேன் பசுங்கிளியே!

பொட்டும், கொண்டையிலே புதுக்கனகாம் பரப்பூவும்
பட்டும், கல்வைத்த பதக்கமும், முகப்பூச்சும்
கையில் கடிகாரம் கட்டிமணி பார்ப்பதுவும்
செய்ய வாய்திறந்து சிரிப்புமணி யடிப்பதுவும்
பைய நடப்பதுவும் பார்க்காமல் பார்ப்பதுவும்,
தொய்யில் எழுதுவதும் தோகையர்கள் நாங்களெலாம்
காதல் போருக்குக் கட்டும் படைக்கலன்கள்.
காதல் இலக்குக் கண்ணெதிரில் இல்லையென்றால்
மாதர் படைக்கலன்கள் மதிப்பிழந்து போகுமன்றோ?
பட்டங்கள் பெற்றாலும் பதவியிலே இருந்தாலும்
கட்டில் பதவியன்றோ கன்னியர்க்கு மேல்பதவி.
உணவில்லா விட்டாலும் உறங்கலாம்; கைப்பிடித்த
கணவன் விடுமூச்சு காதருகில் இல்லையென்றால்
தூக்கம் வருமா? துடிப்பார்கள் தோகையர்கள்!
எண்ணெ யில்லாமல் இயந்திரம் சென்றாலும்
கன்னியர் வண்டி காதலின்றி ஓடாது.

மோதும் அலைவைகை மூதூர் மதுரையிலே
காதலனை முதன்முதலில் கவியரங்கில் சந்தித்தேன்.
புத்தகம் வேண்டுமென்றான்; புத்தகத்தைநான் கொடுத்தேன்;
பேரூர் என்னவென்றேன்; ஆரூர் எனச்சொன்னான்.
கொய்யாக் கனியையின்று கொய்யவா எனக்கேட்டான்;
ஐயோ அதோவென்றன் அன்னையென்றேன் சென்றுவிட்டான்

அன்னை அழைத்தாள்; ஆரென் றெனைக்கேட்டாள்;
சென்னை அமைச்சர், சிரிப்பழகர் எனச்சொன்னேன்.

பெண்பார்க்க வரட்டும்; பேசலாம் எனச்சொன்னாள்.
கண்பார்த்துக் காத்திருந்த தோழியர்கள் ஓடிவந்து
வாழைக் குலையை வளைத்தபல மந்திகள்போல்
ஆளைக் குடைந்தே அப்பப்பா துளைத்துவிட்டார்.
நாக்கில் தேள்கொடுக்கை நட்டுவைத்த ஒருதோழி
'கார்குழலே! நீவிரும்பிக் காதலிக்கும் கண்ணனுக்கு
நாற்பதும் எட்டும் நடக்கின்ற வயதாமே'!
என்று மெதுவாக என்காதில் கிசுகிசுத்தாள்.

'இருந்தால் என்னேடி? இளங்கிளியே! சோலையிலே
முற்றிய செங்கரும்பில் முதிர்ந்த சுவைபெறலாம்;
முற்றாக் கொழுந்தாடை உப்புக் கரிக்காதோ?
நெற்றுக்காய் புளிக்குமடி; நிழலில் குடியிருந்து
முற்றும் கனிந்த மாம்பழத்தின் சுவைவருமா?
காளையை மணந்த கன்னியர்கள், நாள்தோறும்
ஆலைக் கரும்பாகி அலறுவதை அறியோமா?
காளை அணைப்பான்; கன்னத்திலும் அடிப்பான்.
வாலைக் குமரியே! வயதான கணவன்மார்
கண்ணாடிப் பாத்திரத்தைக் கையால் தொடுவதுபோல்
மெள்ளத் தொடுவார்கள்; மிக்கஅன் போடுநம்மைப்
பக்குவ மாகப் பழுதின்றிக் காப்பார்கள்.
காளை என்றால்நம் கைக்குள் இருப்பானா?
நடுவயதைத் தாண்டி நடக்கின்ற காதலனோ
படுவென் றால்படுப்பான்; எழுவென்றால் எழுந்திருப்பான்
தட்டின்றிச் செலவுசெய்யத் தகுந்த பெருநிதியும்
கட்டழகுக் காதலன் கடைக்கண் கருணையுமே

பெற்றுவிட்டால் பெண்களுக்குப் பிறிதொன்று வேண்டுமா?
கருணையும், நிதியும் கலந்த தலைவனடி!'
என்று பெருமையுடன் எடுத்துரைத்தேன்; அவ்விடத்தில்
நின்று உரையாட நினைக்காமல் விட்டகன்றேன்.

மிளகாய்ப் பழமூக்கும் மேனிப்பச்சைப் பட்டும்
அழகாய்ப் பெற்றிருக்கும் அஞ்சுகமே! கொஞ்சங்கேள்!
பூபால ரெல்லாம் புதுக்காரில் காத்திருக்கும்
கோபால புரத்துக் குடியிருப்பை நீயறிவாய்.
மாடியின் மீதென்றன் மாப்பிள்ளை வீற்றிருப்பார்.
ஓடிப் பறந்தே உள்வாயிற் படிநுழைந்தால்
வட்டச் செயலாளர் என்ற பெயரோடு
மாமியா ரெல்லாம் வரிசையுடன் வீற்றிருப்பார்.
காவல் துறைக்கார நங்கையரும் நாத்தியரும்
ஆவலுடன் வருபவரை அதட்டுவார்; அஞ்சாதே!
கொல்லிப் பலாப்பழத்தில் கூடியுள்ள ஈக்களைப்போல்
சென்னை நகரைச் சேர்ந்தஅவர் பரிசனங்கள்
முன்னும் பின்னும் மொய்த்திருப்பார்; அறைக்குள்ளே
சட்டசபைத் தோழரெல்லாம் ஒட்டியுற வாடிடுவார்.
காதலன் பேட்டிசற்றுக் கடினந்தான் இந்நாளில்;
இந்தத் தடைகளுக்கு இளங்கிளியே அஞ்சாதே!
சீட்டுக் கவியொன்றைச் செல்லவிடு; 'சேலத்துப்
பாட்டின் இளவரசி பரிவோ டனுப்பிவைத்தாள்'
என்றக் கவியில் எடுத்தியம்பு; பாட்டென்றால்
சட்டசபைக் கூட்டத்தை ஒத்திவைக்கும் என்தலைவன்
நீட்டும் கரத்தோடு நின்னை வரவேற்பான்.

காலை பத்துமணி காண்பதற்கு நன்னேரம்;
குளித்து முடித்துக் கும்பிட்ட கையோடு
பளிச்சென்று முன்வருவான்; பசுங்கிளியே! அவனுடைய
பின்னழகைப் பார்த்தால் பெருமதிப்பு மிகத்தோன்றும்
முற்றிக் கனிந்த முதுமை பளபளக்கும்;
கற்ற பெரும்புலமை காட்சிதரும்; காண்பாய்நீ!
முன்னழகை நோக்கினுல் முழுதும் வியப்படைவாய்!
பத்து வயதைப் பக்குவமாய்க் குறைப்பதற்குக்
கத்திபோல் மீசை கச்சிதமாய் வைத்திருப்பான்.
ஒற்றை யடிப்பாதை ஊர்நடுவே செல்லுதல்போல்
நெற்றிக்கு மேலே நெடுவகிடு பெற்றிருப்பான்;
வெள்ளை உடைப்பிரியன்; வேகமாய் எப்போதும்
துள்ளி நடப்பதன்றி மெள்ள நடந்தறியான்.
தன்னைவெளிப் படுத்தாமல், தன்முன்னுல் இருப்பவரின்
எண்ணத்தை அளப்பதற்கு ஏற்றவொரு கருவியாய்க்
கறுப்புக் கண்ணுடியை விருப்பமுடன் அணிந்திருப்பான்.

உன்னிடத்தில் ஒருசேதி உரைக்கின்றேன்; நீயதனை
உள்ளத்தில் போட்டுவை; ஒருவரிடம் சொல்லாதே!
என்னைப்போல் காதலியர் இவனுக்குப் பலருள்ளார்.
வாணியம் பாடியிலே வாழ்கின்ற கைகாரி
முகம்மதியப் பெண்ணின்மேல் மூண்டபெருங் காதலினுல்
அகம்நொந்து பித்தாகி அலைந்து திரிவதுண்டு.
எண்ணம் அவள்மீது இருக்கின்ற நேரத்தில்
என்னுடைய காதலினை எடுத்தங்குச் சொல்லாதே!
குளறுவாய்க் கிளியென்ற குற்றம் உடையள்நீ!
உளறி விடாதே, உள்ளநிலை அறியாமல்.

ஆம்பல் புறவிதழை அவிழ்க்கின்ற நெய்தல்நிலப்
பூம்புகார்க் கோவலனை நீயறிவாய்; இவன்கூடப்
'பூம்புகார்' தந்த பொல்லாத காதலன்தான்;
'பூம்புகாரிக் காதலனே! பொறுமையைச் சோதித்தால்
நாம்புகார் செய்வோம் நாலுபேர் முன்னாலே;
கண்ணகியைப் போலக் கண்ணீர்க் குளமாகி
இந்நாள் தலைவி இராள்;' என் றெடுத்துரைப்பாய்!

---

கலைஞர் கவியரங்கம் - சேலம்.

# கரைந்ததுவா காற்றினிலே
# காஞ்சிக் கீதம்

பூக்காடு பொசுங்கியதா!
புகழ்விரித்து நடனமிட்ட
புள்ளித் தோகை
தீக்காட்டில் சிக்கியதா!
தேரச்சு முறிந்ததுவா!
தமிழர் மானம்
காக்கத் துடித்தெழுந்த
கையிற்று விழுந்ததுவா!
கருணை யற்ற
சாக்காடே! உனையின்று
சாகடிக்கத் தமிழ்மறவர்
தேடுகின்றார்.

கருங்கடலில் பெருந்தீயா!
கதிரவனில் பனிமழையா!
வானில் நீந்தி
வருநிலவில் பெரும்பிளவா!
வற்ருத காவிரிக்கு
வறுமை நோயா!
இருந்தமிழுக் கொருமுடிவா!
இதயத்தில் கொலுவிருக்கும்
காஞ்சி அண்ணுத்
துரைமன்னு! உன்றனுக்கா
சாக்காடு? நாங்களிதைச்
சகிக்க மாட்டோம்!

நல்லர்க்கு நல்லன்நீ!
நாக்காலே தாக்குதல்கள்
நடத்து கின்ற
மல்லர்க்கு மல்லன்நீ!
மதிச்செருக்கால் ஏமாற்றி
மயக்கும் தீய
குள்ளர்க்குக் குள்ளன்நீ!
கொள்கைக்குக் கொடிமரம்நீ!
ஆனல் இன்று
மில்லர்க்கும் எங்களுக்கும்
மிகப்பெரிய ஏமாற்றம்
தந்து சென்ருய்!

குத்தா யிரம்பெற்ற
கோவேந்தன் களிற்றைப்போல்
குவித்து வைத்த
புத்தாரப் பூமழையில்
புதையுண்ட உன்னுடம்பைக்
கண்ட மக்கள்
அத்தா!என் றழுதார்கள்!
அண்ணாஎன்! றழுதார்கள் !
ஆனால் நீயோ!
'தொத்தா'என் றழுதவண்ணம்
துணைத்தாயின் இருப்பிடத்தைத்
தேடிச் சென்றாய்!

நாடகத்தாய் பெற்றவெற்றி
நாவலனே! உன்னுடைய
நடிப்பின் வெற்றி!
மேடைத்தாய் பெற்றவெற்றி
மிடுக்கான உன்நாக்கு
மேடை வெற்றி!
ஓடைத்தேன் ஒத்ததமிழ்
ஓச்சுகின்ற வெற்றியுன்கை
எழுத்தின் வெற்றி!
தாடிவைத்த பெரியாரின்
தத்துவத்தின் வெற்றியுன்றன்
தடந்தோள் வெற்றி!

தாயிருக்கும் பக்கத்தைத்
தாவுகின்ற கைக்குழந்தை
பார்ப்ப தைப்போல்
வாய்விரித்த தாமரைப்பூ
வானத்துச் செங்கதிரைப்
பார்ப்ப தைப்போல்
பாய்விரித்த பெரும்புலமைப்
பகுத்தறிவுப் பெருங்கலமே!
பதைப்பு டன்நீ
போயிருக்கும் பக்கத்தைப்
போர்த்தமிழர் எல்லாரும்
பார்க்கின் றார்கள்!

வானத்தைக் காணுகையில்
வாய்த்தவுன்றன் பெரும்புலமை
காணு கின்றோம்;
மீனினத்தைக் காணுகையில்
மேன்மைபெற்ற உன்படைப்பைக்
காணு கின்றோம்;
வானவில்லைக் காணுகையில்
வடித்தவுன்றன் எழுத்துவண்ணம்
காணு கின்றோம்;
கூன்பிறையில் உன்கலையைக்
கோடைமழை யில்பேச்சைக்
காணு கின்றோம்.

வானவில்லை எட்டிவிட்டோம் என்றிருந்தோம்
வங்காளக் கடலுக்குள் தள்ளப் பட்டோம்
கூனவிளம் பிறையெடுத்து முடியும் போது
கொடும்பாம்புப் பற்களுக்குள் சிக்கிக் கொண்டோம்
மீனரசு செய்கின்ற வான வீதி
விளக்கைப்போல் இருந்தவனே! உன்னை மீண்டும்
காணுதற்கு முடியாதாம்; இக்குருட்டுக்
கண்களுக்கு முகத்திலினி என்ன வேலை?

இனிமேலும் விண்ணுக்கு மதிய மில்லை;
இளந்தென்றல் இந்நாட்டுக் கினிமேல் இல்லை;
கனியில்லை பூவில்லை சோலைக் குள்ளே;
கரைந்ததுவா காற்றினிலே காஞ்சிக் கீதம்!
குனியாத புகழில்லை; மலையின் உச்சிக்
கோபுரத்து விளக்கில்லை; தம்பி யர்கள்
இனியேங்கி விடுவதற்குப் பெருமூச் சில்லை;
இருவிழியில் அழுவதற்குக் கண்ணீர் இல்லை.

சுனைத்தண்ணீர் இனியெமக்குச் சுடுநீர்ப் பொய்கை!
சோலையெல்லாம் முட்புதரே! மேல்வி ழுந்து
நனைக்கின்ற குளிர்மழையோ நெருப்புத் தாரை!
நல்லாவின் பாற்கோப்பை நச்சுக் கோப்பை!
பனிமலர்கள் பார்ப்பதற்குப் புண்கள்! வெள்ளைப்
பால்நிலவோ வெறுந்தழும்பு! பூணு கின்ற
அணிமணிகள் உடம்புக்குச் செந்தேள்! இன்பம்
அத்தனையும் இனியெமக்குத் தூண்டில் முள்ளே

உன்முழக்கம் சிங்கத்திற் கிலேயே; அன்பின்
ஊற்றெழுக்கம் மேகத்திற் கிலேயே; உன்றன்
புன்னகையின் குளிர்ச்சியினைக் கோடைக் கானல்
புதுமலரும் காட்டாதே! தொடுக்கும் கேள்வி
மின்னலுக்கு நீகொடுக்கும் விடையின் வேகம்
மிடுக்கெல்லாம் எதிர்த்துவரும் பந்துக் குண்டா?
தின்னவரும் புலிகளையும் மன்னிக் கின்ற
திறமுன்போல் நமைத்தாங்கும் மண்ணுக் கேது?

கொடியெடுத்த பெருங்கோட்டைக்
கொற்றத்தேர் மன்னு!
குற்றால அருவியைப்போல்
கொஞ்சுதமிழ் அண்ணு!
அடியெடுத்து வைத்தேறும்
அரங்கத்தி லெல்லாம்
அரசாட்சி செய்யாமல்
அடங்கியதோ உன்நா!

முடியெடுத்து வைத்தோமே;
முரசெழுப்பு முன்னே
முடியாதென் றெமைத்தடுத்து
மூடியதுன் கண்ணே!
அடிதொடர்ந்து நின்வழியில்
ஆட்சியினைச் செய்வோம்;
அழகுதமிழ்ப் பாட்டிலுன்றன்
பெருமைகளைப் பெய்வோம்!

அண்ணு இரங்கற் கவியரங்கம் சேலம்.

# சந்தனப் பேழை

பூமிக்குள் இருக்கும் ஆணிவேர்மீது
பார்வை வெளிச்சம் படுவதில்லை.
ஆனால்...அந்த வேரே
மரத்துக்கு ஆதாரம்.
அண்ணனே!
சந்தனப் பேழைக்குள்.
சரித்திரத்தை முடித்துக்கொண்ட
உன்மீதும் எங்கள்
விழிவண்டுகள் மொய்ப்பதில்லை.
ஆனால்...எங்கள்
வாழ்வுக்கும் நீயே ஆதாரம்!

நீ தமிழரின்
வார்த்தை வசந்தம்!
நாக்கு நாகரிகம்!
கனவின் நனவு!
நனவின் கனவு!
புதுவானத்தின்
புல்லரிப்பே செங்கதிர்!
நீயோ—
எங்கள் இதயத்தின் புல்லரிப்பு.

சிலம்பு—
இயலுக்கு இயல்
இசைக்கு இசை
நாடகத்துக்கு நாடகம்
நீயோ—
அண்ணனுக்கு அண்ணன்
தொண்டனுக்குத் தொண்டன்
தலைவனுக்குத் தலைவன்
நீயும் ஒரு முத்தமிழ்க் காப்பியம்!

நீ ஒரு குறள்!
எனவே...உனக்கும்
உலகம் உள்ளளவும்
உரையெழுதிக் கொண்டிருப்போம்.

அரசியல் தலைவர்கள் எல்லாரும்
மாளிகை வாசலில்
மத்தாப்புச் சுடர்களாக இருந்தனர்.
நீதான்—
ஏழைகள் வீட்டில்
அடுப்பு நெருப்பாக நுழைந்தாய்.

உடலோடு ஒட்டிக்கொண்டிருந்தாலும்
நகங்களை வளர்ப்பது
நாகரிகமன்று—என்று
கருதியவன் நீ!
ஆனால்...உனக்குப்பின்
நகங்கள் வளர்ந்து
நம்மையே காயப்படுத்துகின்றன.
நீ கூராக்கிய 'ஊசிகள்'
உன்னையே குத்துகின்றன.

நீயோ—
பேழையிலிருந்து சிரிக்கிறாய்!
உன்சிரிப்புக்குப்பொருளென்னவென்று
நாங்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம்.
'அலெக்சாந்தர் எனக்கு
மகனாகப் பிறந்ததில் சிறப்பில்லை.
ஆனால்...

அறிஞர் அரிஸ்டாட்டிலே! அவன்
உங்கள் காலத்திலே பிறந்தானே
அதுதான் சிறப்பு!'...என்ருன்
பெருவீரன் பிலிப்.

அண்ணு!...நாங்கள்
இருபதாம் நூற்ருண்டில்
இருக்கின்ருேம் என்பதில்
எந்தச் சிறப்புமில்லை.
உன் காலத்தில்
இருந்தோம் என்பதே
எங்களுக்குச் சிறப்பு!

# தையாட்சி!

மார்கழியின் காலடியைத் தொடர்ந்துவந்து
மணம்பேசும் மாப்பிள்ளை தையே! பெய்யும்
கார்ப்பருவக் காலத்தில் காதல் நட்டுக்
காத்திருக்கும் காதலர்கள், இதழ் நிலத்தில்
வேர்க்கரும்பு முத்தத்தை அறுக்கும் தையே!
விரல்கோக்கும் விழாத்தையே! இளைய பெண்டிர்
வார்த்தைவாய்ப் பாட்டடக்கி, மேனி வீணை
வாசிக்க விழாவெடுக்கும் தையே! வாழ்க!

இருல்மீனைப் போன்றிருக்கும் செழித்த மஞ்சள்
எடுத்தரைத்து முகத்துக்குப் பூசித், தங்கள்
வரால்மீனைப் போன்றிருக்கும் கணுக்கால் நோக
வாசலுக்குக் கோலமிட்டு, மேனிப் பாரம்
பொறுதஇடை நடுநடுங்க நடந்து, பொங்கற்
புதுப்பானைச் சோறெடுத்துப் படைத்துக், காதல்
அருதமிழ் மொழியாலே அத்தான் என்றே
அத்தைமகள் வரவேற்கும் தையே! வாழ்க!

எத்தனைபூ மலர்ந்தாலும் முல்லை போல
இலக்கியத்தில் மணக்கின்ற பூக்கள் இல்லை;
எத்துனை நூல் இருந்தாலும் குறள்போல் நம்மை
எடுத்துயர்த்தும் பெருநூல்கள் எதுவு மில்லை.
எத்தனையோ திங்கள்வந் தாலும், தைபோல்
இனிக்கின்ற திங்களில்லை; இந்த நாட்டில்
எத்தனையோ அரசிருந்தும், கலைஞர் ஆட்சி
இருப்பதுபோல் நிலையான ஆட்சி யில்லை.

நெய்யாட்சி மணக்கின்ற பொங்கற் சோற்றை
நெடுவாழை இலைமீது படைக்கு மிந்தத்
தையாட்சி போல்மணக்கும் தமிழர் ஆட்சி
தழைத்தோங்க வாழ்த்துகிறேன்; நடிக்கும் தீய
பொய்யாட்சி புரட்டாட்சி நமக்கு வேண்டாம்;
பொங்கல்விழா இங்கிருக்க நமக்கேன் ஓணம்?
கையெல்லாம் நெய்யொழுகப் பொங்க லுண்டு
களிப்பவர்க்குத் தேவையில்லை கஞ்சி வள்ளம்!




சந்தனப் பேழை